# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:94** **தேதி:-30.01.2016**

**ஊதிய மாற்றம் உண்டா? இல்லையா?**

அன்பார்ந்த தோழர்களே,

28.01.2016 அன்று பெங்களூருவில் பத்திரிக்கையாளர்களை சந்தித்த BSNLன் CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா, நிறுவனம் லாபம் ஈட்டவில்லையெனில் BSNL ஊழியர்கள் 01.01.2017 முதல் ஊதிய மாற்றம் பெற மாட்டார்கள் என தெரிவித்துள்ளார். இது நிர்வாகத்தின் பார்வை. ஆனால் BSNL ஊழியர் சங்கம் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பல ஆண்டுகளாக கருவிகள் வாங்கப்படாத காரணத்தால் "VOICE CALL BUS"சினை BSNL நிறுவனம் தவறவிட்டு விட்டதாக முன்னர் நமது CMDயே ஒத்துக் கொண்டுள்ளார். கடந்த ஆட்சியாளர்கள் பத்து ஆண்டு காலமாக BSNL நிறுவனத்தை வளரவிடாமல் தடுத்தார்கள் என மாண்பு மிகு தொலைதொடர்பு அமைச்சரே பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எனவே BSNL நஷ்டமடைவதற்கு அதன் ஊழியர்கள் காரணமல்ல, ஆனால் அரசாங்கமும் அமைசர்களுமே காரணம். மறு புறம் இந்த நிறுவனத்தை புத்தாக்கம் செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் BSNL ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். 'வாடிக்கையாளர் மகிழ்விப்பு வருடம்' மற்றும் 'புன்னகையுடன் கூடிய சேவை' ஆகியவைகளே இதற்கு சான்று. எனவே கடந்த அரசும், அமைச்சர்களும் செய்த குற்றங்களுக்கு ஊழியர்களை நிர்வாகம் தண்டிப்பது சரியாக இருக்காது. 01.01.2017 முதல் ஊழியர்களும், அதிகாரிகளும் ஊதிய மாற்றம் பெற்றாக வேண்டும். அடுத்த ஊதிய மாற்றம் மறுக்கப்படும் என்றால் 100 சதவிகித வேலை நிறுத்தம் நடைபெறும் என்பதை நிர்வாகம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

சிறந்த சேவை தருவது நமது கடமை. எனவே 'புன்னகையுடன் கூடிய சேவை' - 100 நாள் திட்டத்தை வெற்றிகரமாக்குவோம். BSNL நிறுவனத்தை பாதுகாப்போம். அதே சமயம் நமது நியாயமான ஊதிய மாற்றம் மறுக்கப்படும் என்று சொன்னால், வேலை நிறுத்த போராட்டம் மூலம் பெறுவதற்கும் நாம் தயாராக இருப்போம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**